## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண்.12/2019

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு. ராஜா முகமது, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2022 ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 16.09.2022**

**பெயர் - தேவன்**

**த/பெ - கோவிந்தன்**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 12.28 p.m.**

**முதல் விசாரணை தொடர்ச்சி**-

2. (1). மறுஆய்வு மற்றும் மீள் குடியேற்ற பதிவேட்டின் சான்றிட்ட நகல் 02.08.2016 தேதியிட்டது **(வாசா ஆ 1 )** ஆகவும்,

(2). 1395 பசலி வருடத்திற்கான தாவா சொத்திற்கான அடங்கல் கணக்கு சான்றிட்ட நகல் **(வாசா ஆ 2 )** ஆகவும்,

(3). 1404 பசலி வருடத்திற்கான தாவா சொத்திற்கான அடங்கல் கணக்கு சான்றிட்ட நகல் **(வாசா ஆ 3 )** ஆகவும்,

(4). 01.10.2015 தேதியிட்ட கோட்டாச்சியர் அவர்களின் அழைப்பானையின் அசல் **(வாசா ஆ 4 )** ஆகவும்,

(5). 10.12.2017 தேதியிட்ட மீஞ்சூர் காவல் நிலையத்தால் வழங்கப்பட்ட மனு ரசீது எண் 370/2017யின் அசல் **(வாசா ஆ 5 )** ஆகவும்,

(6). மேற்படி காவல் நிலையத்தில் இருந்து எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பானை **(வாசா ஆ 6 )** ஆகவும்,

(7). கவுத்திஹான் என்பவரின் இறப்பு சான்றிதழின் சான்றிட்ட நகல் **(வாசா ஆ**

**7 )** ஆகவும்,

(8). கோவிந்தன் என்பவரின் இறப்பு சான்றிதழின் சான்றிட்ட நகல் **(வாசா ஆ 8 )** ஆகவும்,

(9). கோவிந்தன் என்பவரின் வாரீசு சான்றிதழின் சான்றிட்ட நகல் **(வாசா ஆ 9)** ஆகவும்,

(10). 08.11.2018 தேதியிட்ட நான் காவல் உதவி ஆய்வாளர் மீஞ்சூர் காவல் நிலையம் அவர்களிடம் அளித்த புகாரின் கை நகல் **(வாசா ஆ 10 )** ஆகவும்,

(11). கவுத்திஹான் என்பவர் பெயரில் உள்ள தாவா சொத்திற்கான பட்டா பாஸ் புத்தகத்தின் அசல் **(வாசா ஆ 11 )** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகோளுக்கு இனங்க ஒத்திவைக்கப்படுகிறது)**

**விசாரணை முடியும் நேரம்- 12.45 p.m.**